## Act – 23 | சட்டம் - 23

| Act – 23 | சட்டம் - 23 |
|---|---|
| Representation of People Act, 1950 | மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 |
| Article 324 to 329 of Part XV of the constitution deals with the electoral system in our country. | இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி XV-ல் 324 முதல் 329 வரை உள்ள ஷரத்துகள் நமது நாட்டின் தேர்தல் முறையை பற்றி கூறுகிறது. |
| Constitution allows Parliament to make provisions in all matters relating to elections to the Parliament and State legislature. | நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தல் பற்றிய விவகாரங்களில் சட்டம் இயற்ற நாடாளுமன்றத்திற்கு அரசியலமைப்பு அதிகாரம் வழங்கியுள்ளது. |
| Parliament had enacted two act viz<br>(i) Representations of Peoples Act (RP Act) 1950.<br>(ii) Representations of Peoples Act (RP Act) 1951.<br>To provide a detailed framework around free and fair elections in the country. | இதன் அடிப்படையில் நாடாளுமன்றம் இரண்டு சட்டங்களை இயற்றியது<br>(i) மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950<br>(ii) மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951.<br>இவ்விருசட்டங்கள் நியாயமான சுதந்திரமான தேர்தலை இந்தியாவில் நடத்திட வழிவகை செய்கிறது. |
| Highlights of RP Act, 1950 | 1950 சட்டத்தின் சிறப்பு கூறுகள் |

| | |
|---|---|
| 1. Qualification of Voters. | 1. வாக்காளர்களின் தகுதி |
| 2. Preparation of electoral rolls. | 2. வாக்காளர் பட்டியல் தயார் செய்தல். |
| 3. Delimitation of Constituencies. | 3. தொகுதி வரையறை செய்தல். |
| 4. Allocation of seats in the Parliament and State legislature | 4. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்திற்கான எண்ணிக்கைகளை ஒதுக்கீடு செய்தல். |

## Scheme – 23 திட்டம் -23

| | |
|---|---|
| Women Related Schemes | பெண்கள் தொடர்பான திட்டங்கள் |
| 1. Priyadharshini Scheme | 1. பிரியதர்ஷினி திட்டம் |
| It is Women Empowerment and livelihood programme | இத்திட்டம் பெண்கள் முன்னேற்றம் மற்றும் வாழ்வாதார திட்டமாகும். |
| Implemented in Mid Gangetic Plains | கங்கை சமவெளி பகுதிகளில் நடைமுறைபடுத்தப்படுகிறது. |

We Shine Academy TM

| | |
|---|---|
| The focus of the project is on livelihood enhancement, the beneficiaries will be empowered to address their Political, Legal, Health problems issues through rigorous capacity building. | இத்திட்டம் நோக்கமானது வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், பயனீட்டாளர்களின் அரசியல், சட்டம், உடல்நலம் போன்றவற்றை மேம்படுத்துதலாகும். |
| 2. Dhanalakshmi Scheme | 2. தனலட்சுமி திட்டம் |
| Objective | நோக்கம் |
| To provide a set of financial incentives for families to encourage them to retain a girl child, educate her and prevent child marriage. | பெண்குழந்தைகளை படிக்க வைத்து குழந்தை திருமணத்தை தடுத்து குடும்பங்களுக்கு நிதி உதவியளித்து ஊக்கப்படுத்துதல். |
| The Scheme provides for cash transfers to the family of the girl child on fulfilling certain specific conditions like immunization enrolment and retention in school, insurance covert etc. | மேலும் இத்திட்டத்தின் மூலம் பெண்குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுதல், கல்வியளித்தல், காப்பீடு செய்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்தும் குடும்பங்களுக்கு பணஉதவி அளிக்கப்படுகிறது. |

We Shine Academy™